பருவவெளியீட்டுப் பிரிவு
யாழ்ப்பாண பொதுசனநூலகம்

# அரசு-புலிகள் பேச்சுக்கு அமெரிக்க பேராசிரியர் முயற்சி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும்- அரசுக்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில், அமெரிக்கச் சட்டத்துறைப் பேராசிரியர் ஒருவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளாராம். சிறுப்பின அமெரிக்கப் பேராசிரியரான டாக்டர் காலித் அல் மன்சூர் என்பவரே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தற்போது கொழும்பில

(4-ம் பக்கம் பார்க்க

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 20 இதழ் 357

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 02 — 02 — 1993

## வெளிநாடுகளின் தலையீடின்றி இனப்பிரச்னையை தீர்க்கமுடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

"இலங்கையின் இனப் பிரச்னையை வெளிநாடுகளின் தலையீடின்றித் தீர்க்கமுடியாதென்ற ஒரு நிலை தற்போது உருவாகிவிட்டது. இனப் பிரச்னையை இலங்கை அரசு நினைத்தால் மிக இலகுவாகவே தீர்த்துவைக்கமுடியும். ஆனால் அரசியல் இலாபம் கருதி இப் பிரச்னையை தீர்த்துவைக்கா

(4-ம் பக்கம் பார்க்க)

## 'ராவய' பத்திரிகை அலுவலகம் 'சீல்' வைத்து மூடப்பட்டது!

(கொழும்பு)

'ராவய' பத்திரிகை அலுவலகமும், அச்சிடும்அச்சகமும் நேற்று 'சீல்' வைத்து மூடப்பட்டது.

எதிரணியினருக்கு எதிராக புதிய கோணத்தில் அரசாங்கம் நெருக்கடிகளை கொடுக்கும் முகமாகத்தான் 'ராவய' பத்திரிகை காரியாலயம் 'சீல்' வைக்கப்பட்டது எனக் கூறப்

(4-ம் பக்கம் பார்க்க)

# எழுதுமட்டுவாள், கிளாலியில் ஆட்லறிஷெல், பொம்மர், ஹெலி தாக்கு

# மாணவி உடல்சிதறி பலி; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாள். கிளாலிப் பகுதிகளில் பொம்மர் விமானங்களிலிருந்து குண்டு வீச்சும், ஆனையிறவு. இயக்கச்சி இராணுவ முகாம்களிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதலும் நேற்று அதிகாலை முதல் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களினால் பாடசாலை மாணவி ஒருவர் உடல் சிதறிப் பலியானார். 10 பொதுமக்கள் காயமடைந்தனர், பலவீடுகள் சேதமடைந்தன.

## கணவன், மனைவி, பிள்ளைகள் காயம்

ஆனையிறவு, இயக்கச்சி இராணுவ முகாம் பகுதியிலிருந்து எழுதுமட்டுவாள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை 6-15 மணி தொடக்கம் கடுமையான ஆட்லறி ஷெல் தாக்குதல் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. எழுதுமட்டுவாள் சந்திக்கு அருகில் உள்ள ஒட்டுவெளி என்னுமிடத்தில் வீடு ஒன்றின் மீது விழுந்த ஷெல்லினால், கந்தசாமி குலேந்திராணி (18 வயது) என்ற பாடசாலை மாணவி உடல் சிதறி ஸ்தலத்தில் பலியானார். இவரது தந்தை மு. கந்தசாமி (55 வயது), தாயார் திருமதி க. பொன்னம்மா (45 வயது), சகோதரர்களான க. குலேந்திரமலர் (23 வயது), க. குலேந்திரகுமார் (16 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் பெருமளவில் சேதமடைந்தன. 10க்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் இப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

## போர் நடவடிக்கைகளுக்கு 24 விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென 1991ம் ஆண்டின்பின் 24 விமானங்கள் அரசினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து விமானங்கள் 3, எம் ஐ 8ரக ஹெலிகொப்டர்கள் உட்பட வேறு சில ஹெலிகொப்டர்களும் சுப்பர் சொனிக் விமானங்கள், புக்காரா விமானங்கள், சியாமா செட்டி போர் விமானங்கள். பயணிகள் ஜெட் விமானங்கள் போன்றவை அரசினால் பலகோடி ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை போர் நட

(4-ம் பக்கம் பார்க்க)

## பம்பைமடு; ராணுவ பிடியில் 400 குடும்பங்கள் சிக்கின!

...பகுதியை நோக்கி நேற்றுக் காலை 6-15 மணி தொடக்கம் கடுமையான ஆட்லறி ஷெல் தாக்குதல் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. எழுதுமட்டுவாள் சந்திக்கு அருகில் உள்ள ஓட்டுவெளி என்னுமிடத்தில் வீடு ஒன்றின் மீது விழுந்த ஷெல்லினால், கந்தசாமி குலேந்திராணி (18 வயது) என்ற பாடசாலை மாணவி உடன் சிதறு ஸ்தலத்தில் பலியானார். இவரது தந்தை மு. கந்தசாமி (55 வயது), தாயார் திருமதி க. பொன்னம்மா (45 வயது), சகோதரிகளான க. குலேந்திரமலர் (23 வயது), க. குலேந்திரகுமாரி (16 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் பெருமளவில் சேதமடைந்தன. 10க்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் இப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

## விமானத் தாக்கு; பலர் காயம்

படை முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல் ஆரம்பமாவதற்கு முன்னர், காலை 6-00 மணியளவில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு பொம்மர் விமானங்கள் எழுதுமட்டுவாள் குடியிருப்புக்களை நோக்கி கண்மூடித்தனமாகக் குண்டு வீச்சுக்களை நடத்தின. இத்தாக்குதலில் பூ. இராசையா (65 வயது), இவரது மனைவி இ. இலட்சுமிப்பிள்ளை (55 வயது), மகள் இ. யோகேஸ்வரி 25 வயது), திருமதி எம். வைமணி 51 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர். சுமார் நான்கு குண்டுகள் இப்பகுதியில் வீசப்பட்டன. பல வீடுகளும், பயன்தரு மரங்களும் இக்குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டுள்ளதுடன், கால்நடைகள் பலவும் இறந்துள்ளன.

## பொதுமக்கள் இடம்பெயர்வு

அதிகாலையிலேயே ஆரம்பமான திடீர்தாக்குதல்களால் பீதியுற்ற மக்கள் உடுத்த உடுப்புடனும் கையிற் கிடைத்த பொருட்களுடனும் எழுதுமட்டுவாள் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கில் தமது இருப்பிடங்களை விட்டு நேற்று இடம் பெயர்ந்தனர். காலை முதல் இவர்கள் சைக்கிள்களிலும்; கால்நடையாகவும் நேற்று பகல் வரையும் கொடிகாமம், மிருசுவில், மீசாலை, சாவகச்சேரி போன்ற பகுதிகளை நோக்கி பொருட்களுடன் இடம் பெயர்ந்த வண்ணமிருந்தனர்.

## 3 விமானங்கள் அனர்த்தம்

இதேவேளை நேற்று அதிகாலை 5-45 மணியளவில் கிளாலி கரைப்பகுதியைச் சுற்றி மூன்று பொம்மர் விமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டன. பின் இவ் விமானங்களில் ஒன்று திடீரென கீழே பதிந்து குண்டுத்தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலை தொடர்ந்து மீண்டும் காலை 7-40 மணியளவில் இப்பகுதிக்கு வந்த 3 பொம்மர் விமானங்களும் மீண்டும் பலத்த குண்டு வீச்சினை நடத்தின.

## ஹெலி துப்பாக்கிப்பிரயோகம்

இதேவேளை இப்பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்றும் தாழப்பறந்து சுடும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. இத்தாக்குதலினாலும் கடற்கரையில் நின்ற சில படகுகள் சேதமடைந்தன. பொம்பர் குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்கள், ஹெலிதாக்குதல்களை அடுத்து யாழ். கடனீரேரியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் பதற்றமடைந்த நிலையில் கரைதிரும்பினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

# பம்பைமடு; ராணுவ பிடியில் 400 குடும்பங்கள் சிக்கின!

(வவுனியா)

வவுனியா பம்பைமடுப் பகுதியில் 400 தமிழ்க்குடும்பங்கள் இராணுவத்தினரின் பிடியில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

புலிகளை தேடிப்பிடிப்பதாக கூறிக்கொண்டு நேற்று முன்தினம் வவுனியா பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையின் போது வவுனியா மேற்கிலுள்ள பம்பைமடுபகுதிபடையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. தற்போது பொதுமக்கள் அனைவரும் இராணுவத்திடம் சிக்கியுள்ளனர்.

இந்த ராணுவ நடவடிக்கையின் போது படையினருக்கு உதவியாக ஹெலி கொப்டர்களும் குண்டு வீச்சு விமானங்களும் பலத்த தாக்குதல்களை

(4-ம் பக்கம் பார்க்க

## 5 வர்த்தகர் கைது?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்குப் பெருமளவில் பண உதவி வழங்கியதாக, ஐந்து பிரபல வர்த்தகர்கள் விரைவில் கைது செய்யப்பட உள்ளதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புலிகள் ஆயுதங்கள் வாங்குவதற்கு, இந்த ஐந்து தமிழ் வர்த்தகர்களும் கோடிக்கணக்கான ரூபா பணத்தை வழங்கியதாகவும் இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதே குற்றச்சாட்டின் பேரில், ஏற்கனவே பல தமிழ் வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே. (க-சி

## நெடுமாறன் பிணையில் விடுதலை

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பா. நெடுமாறன் நேற்று சென்னையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இதற்கான உத்தரவைப் பிறப்பித்த நீதிபதி சித்திக்,

4-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி?

(சென்னை)

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கும், கட்சியின் சுயமரியாதையைக் காப்பாற்றவும், தங்களுக்கு இடையே உள்ள கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர்ந்து பாடுபடப் போவதாக காங்கிரஸ் எம். பி. திண்டிவனம் ராமமூர்த்தியும்


(4ம் பக்கம் பார்க்க)

## 'அத்த' பத்திரிகை மீது ஜனாதிபதி வழக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவை அவமதிக்கும் வகையில் அண்மையில் 'அத்த' பத்திரிகை வெளியிட்ட செய்தி தொடர்பாக, மேற்படி பத்திரிகை நிறுவனம் மீது மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்வது குறித்து ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)



லயஞான குபேர பூபதி அளவையூர் V. தெட்சணாமூர்த்தி

★ மணமகன் இல்ல வரவேற்பு: மணவிழா நிறைவைத் தொடர்ந்து 3 தினங்கள் மணமகன் இல்லத்தில் (இணுவில் பாடசாலை ஒழுங்கை, மன்னந் தோட்டம்)

★ மணமகள் இல்ல வரவேற்பு: சனிக்கிழமை பி.பகல் 4.00 மணி

( தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை )

அன்புடன்

மணமகனுக்காக
ஐ. கணேசன் தம்பதியர்
வாரிக்குரு, கரவெட்டி.

(எ 2837)

மணமகளுக்காக
திரு. குமாரசாமி தம்பதியர்
இணுவில்.

18 | 02 | 1890



03 | 01 | 1993

## அமரர் மாணிக்கம் பொன்னையா

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்திடாவகை நல்கினான்
வேய தோள் உமை பங்கன் எங்கள்
திருப்பெருந்துறை மேவினான்
காயத்துள் அமு(து) ஊற ஊறநீ
கண்டுகொள் என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே.

– திருவாசகம்

அன்னாரின் இல்லத்தில் இன்று (2-2-93) செவ்வாய்க் கிழமை நண்பகல் நடைபெறும். வீட்டுக்கிரியைகளி லும், மதியபோசனத்திலும், கலந்துகொள்ளுமாறு. உற்றார், உறவினர் நண்பர்களைக் கேட்டுக்கொள்கின் றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

44/2, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(சி-7188)

(தமிழுக்கு தை 20)

தசமி பி. ப. 1-38 வரை, ரோகிணி மு. இ 8.05 வரை இராகுகாலம் மாலை 3.36 முதல் 5 06 வரை, சுபநேரம் மதியம் 11.06 முதல் 12.35 வரை அமிர்தசித்தயோகம்.

மேஷம்: துன்மார்க்க சினேகம் தொழில் குறைவு மன வெறுப்பு.

இடபம்: காரிய அனுகூலம் புதிய உறவு குடும்பமகிழ்ச்சி

மிதுனம்: கீர்த்தி கெடுதல் சோம்பல் மனச்சஞ்சலம்.

கடகம்: வித்தியாலபம் பணவரவு புதிய ஸ்தானம்.

சிங்கம்: தொழில் சிறப்பு, அன்னியர் உதவி பயணி அனு கூலம்,

கன்னி: காரணமற்ற கிலேசம் குடும்பபகை, தொழில் நஷ்டம்.

துலாம்: மனோதாயம் தனிமையடைதல்வெஞ்சினம்.

விருச்சிகம்: உற்சாகம் தெய்வதரிசனம் பழையபாக்கி வசூல்.

தனுசு: தர்மகாரியங்கள், தொழில் ஆதாயம் புகழ்.

மகரம்: இருப்பிடம் மாறுதல், கடன்உபாதை, விரோதம்.

கும்பம்: பயசிந்தனை, அலைச்சல், கருத்து முரண்பாடு.

மீனம்: மித்திரர் நன்மை, வேண்டியதை அடைதல், விருந்துண்ணல்.

ஜோஸ்யர்

# வருமான வரிச் சட்டத்தில் புதிய திருத்தங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

வருமானவரிச் சட்டத்தில் புதிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதால் பல பொருட்களுக்கு புதிதாக வரி விகிதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

'மாமைட்'க்கு 20 வீதத்தில் இருந்து 10 வீதமாகவும், சில்லறையாக விற்கும் பிஸ்கட்டுகளுக்கு 5 வீதமும் பைக்கட்டுகளில் தகரங்களில் அடைக்கப்பட்ட பிஸ்கட்டுகளுக்கு 20 வீதமும் வரி விதிக்கப்படுமென்றும்

ஜாம், பழரசம், பழச்சாறு ஆகிய உள்ளூர் உற்பத்திக்கு 10 வீதமும், நூடில்ஸுக்கு 10 வீதமாகவும் வரி குறைக்கப்பட்டுள்ளது. சவுக்கார அடிப்படையில் சோயா அவரைக்கு 5 வீதமும், மண்ணெண்ணெய் விளக்குகளுக்கும் அதற்குரிய பொருட்களுக்கும் 10 வீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும்சில பொருட்களுக்கு புதியவரி விகிதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. (சு-சி)

# பலாலி ராணுவமும் பலத்த ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்று அதிகாலை அளவெட்டிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

அளவெட்டி தெற்கில் தோட்டப்பகுதியில் இச்ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அதிகாலை படையினர் மேற்கொண்ட ஷெல்தாக்குதலையடுத்து 1 மணிநேரமாக இப்பகுதியை நோக்கி துப்பாக்கிச்சூட்டினையும் இடைவிடாது நடாத்தினர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் நள்ளிரவில், மாதகலில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். (56 72-சி)

எழுதுமட்டுவாள், கிளாலியில் (1ம் பக்கத் தொடர்ச்சி)

# நான்கு படகுகள் மூழ்கடிப்பு

கிளாலி கடற்கரைப்பகுதியில் பொம்மர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் நான்கு படகுகள் பலத்த சேதமடைந்து கடலில் மூழ்கின. இப்பகுதியில் தேவாலயம் ஒன்றும் சேதமடைந்ததுடன் வீடுகளும், சிறுகடைகளும் சேதமடைந்துமுள்ளன.

# காயமுற்றோர் ஆஸ்பத்திரியில்

எழுதுமட்டுவாள், கிளாலி பகுதியில் இடம் பெற்ற தாக்குதல்களில் காயமடைந்தவர்கள் சிறியகாயங்களுக்குள்ளானோர் பளைசாவகச்சேரிவைத்தியசாலையிலும். கடுமையான காயமடைந்தோர் யாழ். வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறுகாயமடைந்தவர்களில் தென்மராட்சியில் தனியார் ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சைபெற்றனர். இத்தாக்குதல் சம்பவங்களால் தென்மராட்சியில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது. [56 - 156 - 155 - ரி - சி]

# குமாரி கப்பல் நேற்று புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இன்று புறப்படும் என அறிவிக்கப்பட்ட குமாரி கப்பல் நேற்று திடீரென கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றது.

இக்கப்பலை உடனடியாக புறப்பட்டுவருமாறு கொழும்பிலிருந்து கிடைத்த அவசரச் செய்தியினால், இக்கப்பல் நேற்று புறப்பட்டுச்செல்லும்போது 80 தபால் பொதிகள் மாத்திரமே இக்கப்பலில் அவசர அவசரமாக ஏற்றி அனுப்பப்பட்டது. [வி-56-157-இ]

# குமணக் கப்பல் நாளை வருகிறது

(திருநெல்வேலி)

குமணக்கப்பல் பெரும்பாலும் நாளை புதன்கிழமை பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் வடபகுதிக்கான தபால் பொதிகளும், பாடசாலைகளுக்கான தளபாடங்களும், வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருட்களும் அத்தியாவசிய பொருட்களான அரிசியும் மற்றும் பொருட்களும் எடுத்துவரப்படுகின்றன.

குமணவில் வெளியூர் தாபால்களும் எடுத்துவரப்படுகின்றன. இவை வெள்ளிக்கிழமைமுதல் விநியோகிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (157-56-வி-சி)

## ப. நோ. ச. கிளைகளில் உணவுப்பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தின் சகல கிளைகளிலும் உள்ள அ. உ. அட்டைகளுக்கு இவ்வாரத்துக்குரிய உணவுப் பொருட்கள் 28 வது கட்டத்தில் பதிவு செய்து இன்று முதல் விநியோகிக்கப்படவிருக்கிறது.

5 பேருப், 5 பேருக்கு மேலுள்ள குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட குடும்ப அட்டைக்கு 5 கிலோ அரிசி, 5 கிலோ மாவு, 1 கிலோ சீனியும், 5 பேருக்குக் குறைந்த அங்கத்தவர்களையுடைய அட்டைக்கு 2 கிலோ அரிசி, 2 கிலோ மாவு 1 கிலோ சீனி, என்பன வழங்கப்படவிருக்கின்றன.

வழமையான விலையில் இப்பொருட்கள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (161 - வி-சி)

அரசு—புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருக்கும் இவர், புலிகள் அரசு பேச்சுக்கள் குறித்தும் அரசுத் தரப்பினருடன் பேச்சுக்கள் நடத்தி வருகிறார்.

இப்பேச்சுக்கள் சாதகமாக வரும் பட்சத்தில், இவர் புலிகளுடன் தொடர்புகொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது இவர் பிரபல சட்டத்தரணியுமாவார். (சி-க)

வெளிநாடுகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மல் அரசு இழுத்தடித்துக் கொண்டே போகின்றது''.

இவ்வாறு யாழ். நகரில் வந்துள்ள மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் 'ஈழநாடு' பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை இம்மாதம் 11ம் திகதியளவில் கொழும்பில் சந்திக்கவுள்ளேன். தமிழ்மக்கள் படும் கஷ்டங்கள் அனைத்தையும் விரிவாக அவரிடம் எடுத்துச் சொல்வேன். மக்கள் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் போக்குவரத்துச் செய்வதற்கு பூநகரிப் பாதையை விரைவில் திறந்து விடும்படி வலியுறுத்துவேன்.

பூநகரிப்பாதையை திறந்து விடும் வரை தற்காலிகமாக கிளாலிப்பாதை ஊடாக மக்கள் சிலமணி நேரம் பாதுகாப்பாக எதுவித பயமுமின்றிப் பயணம்செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்றும் கோருவேன்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு உயர்ஸ்தானிகர்களைச் சந்தித்து இனப்பிரச்னையில் தலையிட்டு, தமிழ்மக்கள் வருங்காலத்தில் நிம்மதியாக வாழ்வதற்கு ஒரு வழிசெய்யுமாறு அவர்களிடம் கோரிக்கைவிடவுள்ளேன் என்றார். (வி-சி)

## ஓய்வூதியப் பணிக் கொடை

(மானிப்பாய்)

கொழும்பிலிருந்து 115 பேரின் ஓய்வூதியப் பணிக்கொடைகள யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவுக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் 80 சிவில் ஓய்வூதியம பெறுபவர்களின் பணிக்கொடைகளும், விதவைகள் ஓய்வூதியம் பெறுபவர்களது 35 பணிக் கொடைகளும் உள்ளன. (71)

ராவய பத்திரிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

வருமானவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர் வடிகாலமைப்பு அதிகாரிகளும், 'ஊழியர் சேமலாப நிதி' அதிகாரிகளும் ஒரேநேரத்தில் இந்த மூடும் முடிவை எடுத்தாாகள்.

இதுபற்றி ராவய பத்திரிகை ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் கருத்துத் தெரிவிக்கையில், "ராவய' அச்சிடும் அச்சகம் பிரத்தியேகமானது வேறு ஒருவருக்குச் சொந்தமானது. இவர் நகரசபைக்கு வரிகள் கட்டியுள்ளார். இது நகரசபையும் ஒத்துக்கொண்டிருக்கிறது.

வருமான வரித்திணைக்களத்தின் புத்தகங்களை பரிசிலனை செய்தார்கள். சுற்றில் ராவய காரியாலயமும் ராவய அச்சகமும் 'சீல்' வைக்கப்பட்டது. என்றார். (சு-சி)

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை புதன்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது புதன்கிழமை பி. ப 3-00—3-30 மணிவரையும் ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-30—10-00 மணிவரை சேகரிக்கப்படும்.

இதுவரை மீட்புநிதி செலுத்தத்தவறியோர் இக்குறித்த நாட்களில் தமது மீட்புநிதிக்கடனை செலுத்தமுடியும். (சி)

கிரிக்கெட்:

## இந்தியா வெற்றிபெறும்

(கல்கத்தா)

இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெறும் முதலாவது கிரிக்கெட்டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது.

ஸ்கோர் விபரம்: இந்தியா: 371, 36 0 இங்கிலாந்து: 163, 286 இந்தியா வெற்றி பெற இறுதிநாளான இன்று 43 ஓட்டங்கள் பெறவேண்டும். (சி)

0 0 0 0

(ஷார்ஜா)

ஷார்ஜா கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று பாகிஸ்தான் அணியை எதிர்த்து இலங்கை அணி ஆடும். 10.45 மணிக்கு இப்போட்டி ரூபவாஹினியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

போர் நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகளுக்கு தேவையான பல கனரக ராணுவ தளபாடங்களையும் அரசு கொள்வனவு செய்துள்ளது.

டாங்கிகள், சிறியரகடாங்கிகள், பீரங்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள், பொருட்களை ஏற்றியிறக்கும் வாகனங்கள், துப்பாக்கி பொருத்தப்பட்ட நீருந்து விசைப்படகுகள், அதிவேகச் சமரில் ஈடுபடுத்தப்படும் படகுகள் ஆகியன இவ்இராணுவ தளபாடங்களும் சிலவாகும்.

தமது கைவசமிருக்கும் படைக்கலங்கள் இன்னும் இரண்டு வருடங்களுக்கு பாரிய போர் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியுமெனவும் அரசு தெரிவித்துள்ளது.

சுடுகுழல் துப்பாக்கிகளைப் பொறுத்தவரையில் தேவைக்கு அதிகமாக இருப்பதாகவும் அவை படையினருக்கும், காவல்துறையினருக்கும் புதிதாக அமைக்கவுள்ள பிரிவினருக்கும் வழங்குவதற்குபோதுமானவை எனவும் அரசு மேலும் தெரிவித்துள்ளது. (ரி)

4 மணி வரை

## இலங்கை வங்கி சேவை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதித் தலைமைக் கிளை வாடிக்கையாளரின் நன்மை கருதி சில நடவடிக்கைகளை மாலை 4 மணி வரை நீடித்துள்ளது

50,000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை வைப்பிலிடல், பிறஇடங்களுக்கு பணம் அனுப்புதல் (டெயில் ட்ரான்ஸ்பர்) போன்ற நடவடிக்கைகளை வாடிக்கையாளர்கள் மாலை 4 மணிவரை மேற்கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (159-சி)

பம்பைமடுவில்

(1-ம் பக்க தொடர்ச்சி)

மேற்கொண்டன.

3000 படையினரும், டாங்கிகள், பீரங்கிகள் உட்பட பல நவீன ரக ஆயுதங்களும் படையினரால் இந்த தாக்குதலின் போது பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

தமிழகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி ஜெயந்தி நடராசாவும் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி அவர்கள் மேலும் கூறுகையில்: காங்கிரஸ் கட்சி ஒன்றுபடவேண்டுமென்று ஜி. கே. மூப்பனார் ஆதரவாளர்களுக்கும் வாழப்பாடி ராமமூர்த்தி ஆதரவாளர்களுக்குமிடையில் ஒருங்கிணைந்த போக்கு தற்போது உள்ளது. தமிழகத்தில் காங்கிரசை வலுப்படுத்த வேண்டுமென்பதில் சகல தரப்பிலும் மிகுந்த ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது என்றனர். (சு-சி)

ளது.

அத்த

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

'ஜனாதிபதியின் உணவு விபரங்கள்' என்ற தலைப்பில் ஜனவரி 30ம் திகதி அத்த பத்திரிகையில் குறிப்பிட்ட செய்தி வெளியிடப்பட்டதாகவும் இச்செய்தியில் எந்தவித உண்மையும் இல்லையென்றும். இது வெறும் கற்பனை என்றும், இது குறித்து மான நஷ்ட வழக்குத் தாக்கல் செய்வதற்குச் சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்தது. (க-சி)

நெடுமாறன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நெடுமாறன் திருச்சியில் உள்ள தலைமை நீதிபதி முன்னிலையில் தினமும் சமுகம் கொடுக்க வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

10 ஆயிரம் ரூபா சொந்தப் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நெடுமாறன், சட்டம், ஒழுங்கை சீர்குலைப்பதற்குப் பொதுமக்களைத் தூண்டிய குற்றச்சாட்டில் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Nnmber B/10336/B

# கப்பலில் வரும் பொருட்களை சமமாக பகிர்ந்து வழங்குக

## யாழ். ப. நோ. கூ. சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து கப்பலில் வரும் உணவுப் பொருட்களை யாழ். மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஒரே விதமாக பகிர்ந்து வழங்கும்படி, யாழ். ப. நோ. கூ. சங்கம் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு யாழ். செயலகத்தினால் வழங்கப்படும் உணவுப்பொருட்களில் பெரும் ஏற்ற இறக்கம் இருப்பதினால், சில ப. நோ. கூ. சங்கங்கள் பொதுமக்களுக்கு கூடிய அளவிலான உணவுப்பொருட்களை வழங்குகின்றன.

எமது சங்கம் உட்பட வேறு சில சங்கங்களுக்கு குறைந்த அளவிலான உணவுப்பொருட்களை வழங்கிவருவதினால் நாம் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

ஆகவே, தொடர்ந்து கப்பலில் வரும் உணவுப்பொருட்களையாவது அனைத்து ப. நோ. கூ. சங்கங்களுக்கும் ஒரேவிதமாக பகிர்ந்து வழங்கும்படி, தமது கோரிக்கையில் யாழ். ப. நோ. கூ. சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. —ஜி-சி

# ரயில் — பஸ் மோதல் 66 பேர் பலி

(பீக்கிங்)

சீனாவின் வடகிழக்கு பகுதியான லியாபாங் பகுதியில் ரயில் - பஸ் மோதிக்கொண்டதில் பஸ் சாரதி உட்பட 66 பேர் கோரமாக பலியானார்கள். 28 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இக் கோரவிபத்தில் 58 பேர் ஸ்தலத்தில் பலியானதாகவும் மிகுதி 8 பேர் மருத்துவமனையில் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-கி)

## யாழ். ஆஸ்பத்திரியில்

# நாய்க் கடிக்கு 133 பேர் சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதியில், கட்டாக்காலி வீட்டு நாய்க்கடிக்குள்ளாகியவர்களில் 133 பேர் சிகிச்சை பெற்றனர்.

சங்கானை, அச்சுவேலி, சாவகச்சேரி, மந்திகை, புத்தூர், கோப்பாய், பளை, வரணி, வல்வெட்டித்துறை, மானிப்பாய், தெல்லிப்பழை ஆகிய வைத்தியசாலைகளிலும் இருநூறுக்கும் மேற்பட்டோர் கட்டாக்காலி, வீட்டு நாய்களினால் கடியுண்டு ஜனவரி மாதத்தில் சிகிச்சை பெற்றனர். (56)

## அமைச்சர்கள் குழு

# மூதூர் விஜயம்

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் உட்பட சிரேஷ்ட அமைச்சர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று கடந்த சனிக்கிழமை மூதூர் பகுதிக்கு விஜயம் செய்து மூதூர் படகு விபத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியது.

இதுபோன்ற துயரமான சம்பவங்கள் இனிமேல் நடைபெறுவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர்கள் தரப்பில் உறுதி மொழியளிக்கப்பட்டதாம்.

கடந்த வாரம் மூதூர் கடல் பகுதியில்படகு கவிழ்ந்ததில் 80 பேருக்கு மேல் பலியானது தெரிந்ததே. (ஐ-சி)

## பெனசிர் பூட்டோவின்

# கணவர் விடுதலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவி பெனஸிர் பூட்டோவின் கணவர் அலி சர்தாரி நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சட்டத்திற்கு புறம்பான வகையில் ஆயுதங்களை வைத்திருந்தமை உட்பட பல வழக்குகளில் சம்பந்தப்பட்ட இவர் சுமார் 2½ வருடங்கள் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

5லட்சம் ரூபா ஜாமின்கட்டி இவர் சிறையிலிருந்து வெளியேறலாம் என கராச்சி நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அவர் விடுதலை செய்யப்பட்டார். (க)

## திருமலையில்

# இணைப்பு பல்கலைக்கழக கல்லூரி அமைக்கப்படும்

(திருகோணமலை)

திருகோணமலையில் இணைப்பு பல்கலைக்கழக கல்லூரி ஒன்றும், தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திருகோணமலையில் தற்போது இடம்பெற்று வரும் ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

மே மாதத்தில் தொடங்கவிருக்கும் இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி வடக்கு-கிழக்கு மாகாணசபைக் கட்டடத்தில் ஆரம்பமாகும் என்றும், தொழில்நுட்பக் கல்லூரி திருகோணமலை குசைய்யப்பர் கல்லூரிக்கு அருகில் இருக்கும் கட்டடத்தில் இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் 150 மாணவர்களும், தொழில்நுட்பக் கல்லூரியில் 300 மாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் ஹமீத் மேலும் கூறியுள்ளார். (சு-ரி)

# சமய அறிவுப் போட்டி

(கொழும்புத்துறை)

அளவெட்டி தெற்குநாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மகோற்சவத்தை முன்னிட்டு நடத்திய சமயச்சொற்பொழிவு சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் அண்மையில் தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டுள்ளது. (154)

# பெயர் மாற்றம்

புலோலி தெற்கு கம்பாவத்தை, சுப்பன் அல்லது மாசிலாமணி - தங்கமலர் என்னும் எனது பெயரை,

சுப்பன் அல்லது மாசிலாமணி சிசிலியா

என இன்று 02-02-93 முதல் மாற்றிக்கொள்கின்றேன் என்பதை சகலருக்கும் அறிவிக்கின்றேன்.

சிசிலியா
கம்பாவத்தை, புலோலி தெற்கு.

(ஏ 2840)

# பிறந்த நாள் வாழ்த்து

## செல்வன் பிரேமதாசன்

புலோலி தெற்கு, பாக்கியநாதன்—மரியமுத்து தம்பதிகளின் மகன் செல்வன் பிரேமதாசன் தனது 24-வது பிறந்ததினத்தை எதிர்வரும் 6-ந் திகதி சிறப்பாக கொண்டாடவுள்ளார்.

புலோலி தெற்கு நண்பர்கள்.

(ஏ-2841)

# குற்றவாளிகளுக்கு ஆபத்து; காதும் காட்டிக்கொடுக்கிறது

(லண்டன்)

குற்றவாளிகள் தங்களையும் அறியாமல் செய்யும் தவறுகள் விட்டுச்செல்லும் தடயங்கள் குற்றத்தை கண்கூடாகப் பார்த்தவர்களின் சாட்சி இப்படிப் பல விஷயங்களை வைத்துத்தான் முன்பெல்லாம் குற்றவாளிகள் ஓரளவுக்கு சரியாக கண்டுபிடிக்கப்பட்டனர்.

இதன்பின் கைரேகைகளை வைத்து குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் முறை வந்தபோது தடயவியல்துறை, குற்றவாளிகளுக்கு சிம்மசொப்பனமாக இருந்து வந்தது.

தற்போது கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தின் மூலம் ஓரிரண்டு தடயங்களை மட்டும் வைத்துக்கொண்டு மிகத் துல்லியமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் நுட்பத்தை பிரிட்டிஷ் அறிவியல் வல்லுநர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நுட்ப முறை மூலம் கொலைக்குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு மட்டுமன்றி நூறு வருடங்களுக்கு முன் இறந்த ஒருவரின் மண்டையோட்டை வைத்து அவரது உருவத்தை அப்படியே கொண்டு வருவதற்கும் உதவியாக இருக்கும்.

முகமூடி, மற்றும் தொப்பிகளின் மூலம் மூக்கால்வாசி முகம் மறைக்கப்பட்டு நிலையில் குற்றவாளிகளின் புகைப்படம் கிடைத்தால் கூடப்போதும் முகவெட்டை வைத்துக்கொண்டு குற்றவாளிகளின் உருவத்தை கம்ப்யூட்டர் கண்ணிமைக்கும் நேரத்தில் வரைந்து விடும்.

இப்படித்தான் பிரிட்டனில் சமீபத்தில் நடந்த ஒரு வங்கிக்கொள்ளையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. வங்கியினுள் பொருத்தப்பட்டிருந்த வங்கி பாதுகாப்பு 'காமெரா' ஒரு குற்றவாளியின் 'காதை' மட்டும் படமெடுத்திருந்தது. இதை மட்டும் வைத்துக்கொண்டு செய்வதறியாமல் தடயவியல் மற்றும் பொலிஸ் துறை திணறிக்கொண்டிருந்தபோது, இந்தப் புது கம்ப்யூட்டர் தொழில் நுட்பம்தான் கைகொடுத்தது.

காதை மட்டும் வைத்துக்கொண்டு கம்ப்யூட்டர் ஒரு முகத்தை வரைந்து கொடுத்தது. அது ஏற்கனவே பொலிஸாரின் சந்தேகப் பட்டியலில் இருந்த ஒருவரின் முகத்தோற்றத்துடன் நூறு சதவிகிதம் ஒத்துப்போனது. குற்றவாளி பிடிக்கப்பட்டதுடன் தமது குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டார்.

பல்வரிசை, மூக்கு, தலைமயிர் இப்படி முகத்தில் உள்ள ஏதாவது உறுப்பை வைத்துக்கொண்டு வீடியோ மற்றும் இந்தப் புது கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தை இணைத்துக் குற்றவாளியின் உருவத்தை வரைந்து விடமுடியும்.

இந்த தொழில் நுட்பத்தை பெற பல உலக நாடுகள் போட்டி போடத்தொடங்கியுள்ளன. (சி)

நன்றி: ஜுனியர் போஸ்ட்


சகல

பனை, தென்னை தொழில் வல்லுனர்களுக்குமான

# முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றில் இருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும், அந்தந்தப் பகுதி தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே நீங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள மேற்படி சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்று, தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிட்டுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அனுமதியற்ற, இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால், அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற் கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக்கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தென்மராட்சிக் கொத்தணி

01. சாவகச்சேரி தெ. ப. பொ. கூ. சங்கம்
02. கொடிகாமம் ,,
03. பளை ,,

அறிவிப்பாளர்
வட மாகாண
தெங்கு, பனம் பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(ஏ 2832)